தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.24347590

**ஆணை நாள் 03.11.2020**

**முன்னிலை**

**திரு.ச.செல்வராஜ்,எம்.ஏ.,பி.எட்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 1287/E/2019**

திருமதி/செல்வி.P.விஜயகுமாரி .. மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விருதுநகர். .. பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

மேல்முறையீட்டாளர் 28.08.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், ஈஞ்சார் கிராமம், ஆனையூர் கிராமம், மாரனேரி கிராமம், வேண்டுராய்புரம் கிராமம் ஆகிய கிராமங்களில் 1960ம் ஆண்டு முதல் 1985ம் ஆண்டுக்குள் அரசாங்கத்தால் அசைமெண்ட் ஆர்டர் மூலம் கொடுக்கப்பட்ட நிலம், பஞ்சமி நிலம், பூமிதான வாரியத்தின் மூலம் கொடுக்கப்பட்ட நிலம், யார்யாருக்கெல்லாம் கொடுக்கப்பட்டதோ அவர்கள் அனைவரின் நில ஒப்படைப்பு உத்தரவு நகல், அவர்களின் பெயர் பட்டியல், கிராமத்தின் பெயர், பழைய சர்வே எண், புதிய சர்வே எண், பட்டா எண், DKT நம்பர் ஆகியவற்றை தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் 03.09.2019 தேதியிட்ட கடிதத்தில் மேல்முறையீட்டாளரின் மனுவை சிவகாசி வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு மாற்றுதலில் அனுப்பி வைத்திட, அவர் 01.10.2019 தேதியிட்ட கடிதத்தில் மேல்முறையீட்டாளர் கோரிய தகவல்கள் தொடர்பான பதிவேடுகள் தங்கள் அலுவலகத்தில் இல்லை என தகவல் வழங்கியுள்ளது போதுமான தகவல் அல்ல என்று தெரிவித்து 10.10.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான மனுவை முதல் மேல்முறையீட்டு

அலுவலருக்கும் மற்றும் 04.02.2020 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திலும் தாக்கல் செய்துள்ளார்.

2. அந்த மனு தமிழ்நாடு தகவல் ஆணையத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு வரப்பெற்ற தேதியின் அடிப்படையில் காலவரிசை பட்டியலிடப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் விருதுநகர் மாவட்டத்தில் பல மாதங்கள் ஆகியும் முழுமையான தகவல் வழங்கப்படாத மேல்முறையீட்டாளர்களின் நிலுவை மனுக்களின் மீது மாநில தகவல் ஆணையர் அவர்கள், விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) மற்றும் பொதுத் தகவல் அலுவலர்களுடன் 29.09.2020 அன்று காணொலி காட்சி மூலம் விவாதிக்கப்பட இருந்த நிலையில், சிவகாசி வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் 28.09.2020 தேதியிட்டு இவ்வாணையத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில், மேல்முறையீட்டாளர் கோரிய அனைத்து தகவல்களும் 31.01.2020 தேதியிட்ட தகவல் அடங்கிய கடிதம் 03.02.2020 அன்று பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

3. ஆகவே பொதுத் தகவல் அலுவலர் அவர்களால் வழங்கப்பட்ட தகவல் மேல்முறையீட்டாளருக்கு கிடைக்கப் பெறவில்லையெனில் அல்லது திருப்திகரமானதாக இல்லையெனில், அது குறித்து இவ்வாணை கிடைக்கப் பெற்ற 30 தினங்களுக்குள், தனது கைபேசி எண்ணுடன், இவ்வாணையத்திற்கு தெரிவிக்குமாறு மேல்முறையீட்டாளருக்கு அறிவுறுத்தப்படுகிறது. தவறும்பட்சத்தில், ஆவணங்களினடிப்படையில் ஆணை பிறப்பிக்கப்படும் என்பது தெரிவிக்கப்படுகிறது.

**ஒம்/-.ச.செல்வராஜ்,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 1287/E/2019</u>**

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
சிவகாசி, விருதுநகர் மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்/மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விருதுநகர்.

Tmt./Selvi.P.Vijayakumari, D/o.P.Palaniandy,
5/2. RPL, Maladeevu Colony,
Thingalkavikkom (Post).
Kulathupuzha-691 310,
Kollam District, Kerala.

Copy to: File
RJ/PS 06.11.2020